5th November 1966]

பாலாறு பேசின் விதி

*441 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:

வடார்க்காடு மாவட்டத்தில் பம்பு செட்டுகள் அமைப்பதற்கான பாலாறு பேசின் விதியை ரத்து செய்துவிட அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

THE HON. SRI V. RAMAIAH: A statement[a] explaining the position is placed on the Table of the House.

திரு. எஸ். ஜே. ராமசாமி: இந்த பாலாறு பேஸின் விதிகளை இன்னும் கூட, உணவு கட்டுப்பாடு இருக்கக்கூடிய நேரத்தில்கூட சில இடங்களில் நீக்கிவிட்டு சில இடங்களில் வைத்திருக்கிறார்கள். அதையும் நீக்க சர்க்கார் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: சில இடங்களில் அகற்றப்பட்டு சில இடங்களில் வைத்திருக்கக்கூடிய நிலையில் இல்லை. பொதுவாக இருக்கக்கூடிய நிலைகளையெல்லாம் பரிசிலனை செய்து அந்த ரூல்லை இப்பொழுது தளர்த்தியிருக்கிறோம். இது தொடர்ந்து பரிசிலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

உணவு தானியக் கிடங்கு

*442 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்

கனம் திரு. வெ. ராமையா: சில இடங்களில் அகற்றப்பட்டு

(அ) திருச்சி மாவட்டத்தில், K. சாத்தனூரில் சர்க்காரின் உணவு தானிய சேமிப்பு கிடங்கு (Godown) கட்டப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன் எஸ்டிமேட் தொகை எவ்வளவு?

(உ) அதற்கு பைனல் பில் எவ்வளவு கொடுக்கப்பட்டது?

(எ) கன்டிராக்டரால் ஒப்பந்த நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டனவா?

THE HON. SRI V. RAMAIAH: (a) Ten godowns for storage of foodgrains were constructed at K. Sathanur, Tiruchirappalli district, by the State Government on behalf of the Central Warehousing Corporation.

(b) Rs. 44,76,500.

(c) The total value of the contract was Rs. 41,80,147. Deducting Rs. 6,60,344·25 towards cement supplied and a further sum of Rs. 1,04,444 being 2½ per cent of the total value of the contract towards security, the balance of Rs. 34,15,358.75 was paid to him.

(d) Yes.

---

a Printed as Appendix III on pages 405–411.